# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2013/2014 (ஆகஸ்ட் 2018)

**TLS 3223 நவீன இலக்கியக் கொள்கையும் விமர்சனக் கொள்கையும்**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

1. அ. சமுதாயக் கொள்கையை வரைவிலக்கணப்படுத்துக (05 புள்ளிகள்)
   ஆ. சமுதாயவியல் அணுகுமுறைக்குத் துணை செய்யக்கூடிய அதன் அடிப்படைகளைப் பகுத்து விளக்குக. (15 புள்ளிகள்)
2. அ. 'இலக்கியம் சமுதாய உணர்வுநிலைகளில் ஒன்று என்பது மார்க்கிய இலக்கிய/ விமர்சனக் கோட்பாட்டின் அடிப்படையாகும்' சுருக்கமாக விளக்குக. (10) புள்ளிகள்)
   ஆ. மார்க்கிய இலக்கியக் கோட்பாடு இலக்கியத்தின் உருவம், உள்ளடக்கம் தொடர்பாக முன்வைக்கும் முக்கிய கருத்துக்கள் யாவை? (10 புள்ளிகள்)
3. பின்வருவனவற்றுள் இரண்டு பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.
   I. இலக்கியக் கோட்பாடு, இலக்கிய விமர்சனம், இலக்கிய விமர்சனக் கோட்பாடு என்பவற்றுக்கிடையிலான தொடர்பு
   II. 'அமைப்பியல் வாதம் ஒரு பிரதியின் அமைப்புக்கு முக்கியம் கொடுக்கின்றது'
   III. பின்னை அமைப்பியல் முன்வைக்கும் 'வாசகத்துக்கான பன்முக வாசிப்பு'.
   IV. 'தலித்தியம் அதிகாரத்துக்கு எதிரான ஒரு சிந்தனை முறையாகும்'(10x2=20 புள்ளிகள்)

## பகுதி – II

4. பெண்ணிலைவாத இலக்கிய விமர்சனக் கோட்பாட்டின் பிரதான நோக்கங்களை எடுத்துக்காட்டி, அவ்விமர்சனத்தின் வகைகள் பற்றி விபரிக்குக. (20 புள்ளிகள்)
5. பின்னவீனத்துவம் முன்வைக்கும் இலக்கியத்தின் பிரதான பண்புகளை எடுத்துக் காட்டுக. (20 புள்ளிகள்)
6. 'இலக்கியத்தின் உள் அர்த்தங்களையும், ஆழங்களையும் உளவியலின் வெளிப்பாடுகளாக உளவியல் விமர்சனம் பார்க்கின்றது' ஆராய்க. (20 புள்ளிகள்)
7. நீர் அண்மையில் வாசித்த நாவல் ஒன்று பற்றி ஏதாவது ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டியல் அடிப்படையில் விமர்சனம் செய்க. (20 புள்ளிகள்)